

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடல் நலக்குறைவால் காலமான இந்திய சமூக நீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள சென்னை, வானகரத்திற்கு நேற்று (26.9.2024) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், க.கணபதி, இந்திய சுவிஷேச திருச்சபை (ECI) பிரதம பேராயர் டாக்டர் டேவிட் ஒநேசிமு, சென்னை பேராயர் கதிரொளி மாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் - மறைந்த

# பேராயர் எஸ்றா சற்குணத்திற்கு - காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப்.27-**

**மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

உடல் நலக்குறைவால் 22.9.2024 அன்று காலமான மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் பேராயர் எஸ்றா சற்குணம் (வயது 86) அவர்களது உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.09.2024) காலை நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

எஸ்றா சற்குணம் அவர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, தனது இறுதி நாள் வரை தொடர்ந்து சேவை ஆற்றி வந்துள்ளார்கள்.

நேற்று (26.9.2024) சென்னை, கீழ்ப்பாக்கம், கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் உள்ள கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரது உடலுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை - சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில்

# திருச்சி மண்டலப் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

சென்னை, செப். 27 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருச்சி மண்டலப் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டு வரும் கட்டடப் பணிகள் குறித்து. நேற்று (26.09.2024) சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை கூட்டரங்கில் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பணிகள், பொதுப்பணித்துறையின் அறிவிப்புகள் மற்றும் இதர துறையின் அறிவிப்புகளில், நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள், நிலுவையிலுள்ள அறிவிப்பு பணிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை கேட்டறிந்த அமைச்சர் அவர்கள், நிலுவையிலுள்ள அறிவிப்பு பணிகளை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் அவர்கள், ஆய்வுக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து பொறியாளர்களையும் வரவேற்று, ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து, உரையாற்றுகையில், எந்த கட்டுமானப் பணியானாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

கண்காணிப்புப் பொறியாளர்கள், பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள மருத்துவமனை மற்றும் பிற முக்கிய கட்டடங்களை அவ்வப்போது ஆய்வு செய்து, ஆய்வுக் குறிப்புகளைப் பதிவு செய்திட வேண்டும் என்றும், பொதுப்பணித்துறையின் தரக்கட்டுப்பாட்டுக் கோட்ட பொறியாளர்கள், அனைத்து கட்டடப் பணிகளையும் அவசியம் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டப் பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, குறித்த காலத்தில் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும், புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கான மதிப்பீடு தயாரித்தலில் பயன்பாட்டு துறையிடம் அவர்களுடைய தேவையை கேட்டறிந்து, அதன்படி வரைப்படம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், கட்டடம் கட்டுவதற்குமுன் திட்ட உருவாக்க நிதியைப் பயன்படுத்தி மண் பரிசோதனை செய்து, மண் தன்மைக்கு ஏற்றவாறு கட்டடங்கள் உறுதித் தன்மையுடன் கட்டப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இதன் மூலம் திருந்திய நிர்வாக அனுமதியினை தவிர்க்க முடியும் என்று தெரிவித்தார்.

மேலும், கட்டடக் கலைஞர்கள் கட்டட வரைபடங்கள் தயாரிக்கும்போது, கட்டடங்களில் அமைக்கப்படும் கழிவுநீர் குழாய்கள் வெளியேறும் பகுதி, மின் அமைப்புகள் உள்ள பகுதிகளில் கான்கிரிட் போன்ற அமைப்புகள் சரியான முறையில் வடிவமைக்க வேண்டும் என்றும், கட்டடங்களில் நீர்கசிவு ஏற்படாத வண்ணம் தேவையான வாட்டர் ப்ரூப் நடைமுறைகளை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்றும், எம்சாண்ட் சுவர் பூச்சு பயன்பாட்டிற்கு தேவையான கெமிக்கல் கலவை பயன்படுத்த வேண்டும் என்றும், மின் பொறியாளர்கள் அவ்வப்போது மின் அமைப்புகளை ஆய்வு செய்து, மின் கசிவு ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

புதிய முத்திரைத்திட்ட கட்டடப் பணிகளில், பசுமைக் கட்டடம்(Green Building Concept) வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் அவர்கள் உரையாற்றியபின், பொதுப்பணித்துறை திருச்சி மண்டலத்தின் மூலம் நடைபெற்று வரும் அனைத்து கட்டடப் பணிகளையும் ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார். முதலமைச்சர் அவர்களால், அறிவுக்கப்பட்ட திருச்சியில் அமையவுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டட மதிப்பீடு உடனடியாக சமர்ப்பித்து, பணிகள் தொடங்கிட அறிவுரைகள் வழங்கினார். ரூ.110 கோடி மதிப்பீட்டில், திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை சிறப்பு சிகிச்சைப் பிரிவு கட்டடம், ரூ.42 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை பிரிவு கட்டடம், ரூ.25 கோடி மதிப்பீட்டில், அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ரூ.46 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ரூ.45.50 கோடி மதிப்பீட்டில், மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ரூ.34 கோடி மதிப்பீட்டில், கடலூர் அரசு மருத்துவ மனையில் கூடுதல் கட்டடங்கள் ஆகிய கட்டடப் பணிகள் குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத்ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி.இளவேண்மாள், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் செந்தில், சிறப்பு பணி அலுவலர் இரா.விஸ்வநாத், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உளுந்தூர்பேட்டை அருகே - சாலை விபத்தில்

# உயிரிழந்த 6 பேர் குடும்பங்களுக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 27 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, மேட்டத்தூர் கிராமம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

உளுந்தூர் பேட்டை அருகே சாலை விபத்தில் உயிரிழந்த 6 பேர் குடும்பங்களுக்கு ஆறுதல் மற்றும் நிதி உதவி பற்றி அறிவித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு: -

திருச்செந்தூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பும் வழியில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், மேட்டத்தூர் கிராமம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜே.எஸ்.நகர் அருகில் 25.09.2024 அன்று அதிகாலை சுமார் 3.30 மணியளவில் TN73 M 8384 என்ற பதிவெண் கொண்ட வேன் ஒன்று எதிர்பாராத விதமாக சாலையோர மரத்தில் மோதிய விபத்தில் இராணிப் பேட்டை மாவட்டம், மாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ரவி (வயது 60) த/பெ.குணசேகர், செல்வம் (வயது 50) த/பெ.பச்சையப்பன், ராமலிங்கம் (வயது 50) த/பெ. குப்புசாமி, முருகன் (வயது 44) த/பெ.ராஜகோபால், துரை (வயது 35) த/பெ.ராதாகிருஷ்ணன் மற்றும் சக்தி (வயது 20) த/பெ.மகேந்திரன் ஆகிய 6 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர் களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும்,

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு நிதி ஒதுக்காமல் வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசு!

# மும்பை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 151 சதவீதம் அதிக நிதியை ஒதுக்கியுள்ளது!

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் அம்பலம்!

சென்னை, செப். 27 –

சென்னையில் இரண்டாம் கட்டமாக 118 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டத்திற்கு ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்து வருகிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு இதுவரை தனது சொந்த நிதியிலிருந்து 11 ஆயிரத்து 762 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் மூலமாக 6 ஆயிரத்து 802 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு சார்பில் இதுவரை இத்திட்டத்திற்காக 18 ஆயிரத்து 564 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொது முதலீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றிய அரசின் பங்கான 7 ஆயிரத்து 425 கோடியில் ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசால் இன்னும் விடுவிக்கப்படவில்லை. ஆனால் பா.ஜ. கூட்டணி ஆளும் மகாராஷ்டிராவில் மூன்றாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்குத் தேவைக்கு அதிகமான நிதியை ஒன்றிய அரசு வாரி வழங்கியுள்ளது.

மும்பையில் 33.5 கிலோ மீட்டர் தொலைவிற்கு செயல்படுத்தப்படும் மூன்றாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் மொத்த மதிப்பீடு 23 ஆயிரத்து136 கோடியாகும். இதில் ஒன்றிய அரசின் பங்கு 16 ஆயிரத்து 662 கோடியாகும். ஆனால் மகாராஷ்டிரா மாநில அரசின் நிதியான 6ஆயிரத்து 474 கோடியையும் சேர்த்து ஒன்றிய அரசே ஒதுக்கி உள்ளது. இந்த திட்டத்திற்கு 23 ஆயிரத்து 136 கோடி தேவையான நிலையில் 2 ஆயிரத்து 18 கோடியையும் கூடுதலாக ஒதுக்கியது.

அதன்படி மும்பை 3ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 25 ஆயிரத்து154 கோடியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளது. இந்நிலையில் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கு 1 ரூபாய் கூட ஒதுக்காத ஒன்றிய அரசு, மும்பையில் 3ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 151சதவீதம் நிதி ஒதுக்கி உள்ளது ஆர்.டி.ஐ. மூலம் அம்பலமாகியுள்ளது.




தர்மபுரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தர்மபுரி, பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி களுக்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள் நேர்காணல் தர்மபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் ஏற்பாட்டில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் நடை பெற்றது. நேர்காணல் சிறப்பு பொறுப் பாளர்கள் மாணவரணி மாநில இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில மாண வரணி துணைச் செயலாளர் சேலம் ரா.தமிழரசன், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகா தேவி, ஆறுமுகம், மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம், அன்பரசு, வேடியப்பன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.


வாய்மையே வெல்லும்



தமிழ் இதழியலின் முன்னோடி சி.பா.ஆதித்தனார் அவர்களது பிறந்தநாளில் தமிழ்ச் சமுதாயத்துக்காக அவர் ஆற்றிய பணிகளையும், தமிழ் இதழியலுக்கு அவர் அளித்த பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன் !

–மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழர் தந்தை
சி.பா.ஆதித்தனார்
அவர்களின்
120ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார்
அவர்களின் திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாள்: 27.9.2024 வெள்ளிக்கிழமை | நேரம்: காலை 9.30 மணி | இடம்: எழும்பூர், சென்னை

இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ / 986 / வரைகலை / 2024